கிலோ மீட்டர் இருக்கிறது. திருவட்டாறிலிருந்து 12 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள தக்கலையில் உள்ள கருவூலத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் காரணம், அந்த இடம் மலைப் பிரதேசமாக இருப்பதால் அங்கிருந்து பஸ் ஏறிப் போவதற்குச் சிரமமாக இருக்கிறது. டி.ஏ. என்று சொல்லி பணம் பெறப்படுவதால் அரசாங்கத்திற்குத் தான் நிறைய செலவும் ஆகின்றது. ஆகையால், கருணை கூர்ந்து வரும் நிதியாண்டிலாவது ஒரு கருவூலம் திருவட்டாறு பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த குலசேகரத்திலோ, திருவட்டாறிலோ, பேச்சிப்பாறையிலோ அல்லது வேறு எங்கேயாவது துவங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருவட்டாறில் சார்நிலைக் கருவூலம் வேண்டுமென்று கேட்டார்கள். திருவட்டாறை வைத்து அதனைச் சுற்றி 12 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டர் தூரத்திலும், வேறு ஒன்று குழித்துறையிலும் ஆக 3 கருவூலங்கள் இருக்கின்றன. இன்னொன்று ஏற்படுத்துகின்ற அளவுக்கு இப்போது இருக்கிற கருவூலங்களில் வேலைப் பளு வர வேண்டும். அப்படி வேலைப் பளு வருகின்ற நிலையிலே தான், சில வட்டங்களில்—ஒரு துணைக் கருவூலத்தில் அதிகமான வேலைப்பளு இருக்கும் என்பதற்காக இரண்டாகப் பிரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், மற்றொரு துணைக் கருவூலத்திற்கு அவசியம் ஏற்படுகிறது. இப்போது திருவட்டாறைச் சுற்றி இருக்கின்ற கருவூலங்களில் வேலைப் பளு இரண்டாகப் பிரிக்க வேண்டிய அளவுக்கு அவசியம் ஏற்படவில்லை. அப்படி அவசியம் ஏற்படுகின்ற காலம் வரும்போது வேண்டுமானால் திருவட்டாறில் வைக்கலாமா என்பதுபற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 64, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

64—

## கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் மருந்துகளின் செலவின விகிதத்தை உயர்த்துதல்.

*11060— திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிறைச் சாலைகளில் கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு, மருந்துகள் மற்றும் சுகாதார சாதனங்கள் ஆகியவற்றிற்கான செலவின விகிதம் (Rate of expense ratio) எந்த ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டது?

(ஆ) இன்றைய விலைவாசி நிலவரப்படி அந்தச் செலவு விகிதம் உயர்த்த வேண்டியதின் அவசியம் பற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு உணவு, மருந்துகள், மற்றும் சுகாதாரச் சாதனங்கள் ஆகியவை வழங்குவதற்கு செலவின விகிதம் எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆனால், விதிகளின்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அளவில் உணவுப் பொருட்கள், விலையை அடிப்படையாகக் கொள்ளாமல் வழங்கப்படுகின்றன. அதே போன்று நோயுற்ற சிறைவாசிகளுக்கு அனைத்து மருத்துவ சிகிச்சையும் அளிக்கப்படுவதுடன், தேவையான மருந்துகளும் வழங்கப்படுகின்றன. எனவே செலவின அடிப்படையில் இவற்றை மறு பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல்வாதிகள்கூட ஜெயிலுக்கு செல்லுகிறார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கும்போது அங்கு சுகாதார முறை கேடுகள் இருப்பதாக சில மாவட்டங்களிலிருந்து தகவல் தெரிகிறது. அதுமட்டுமல்லாமல் அங்கே இருக்கக் கூடிய ஈயத் தட்டுகளெல்லாம் எந்தக் காலத்திலோ வாங்கிய தட்டுக்கள். அவற்றைப் பார்க்கின்றபோது நமக்கே ஒரு அறுவருப்பாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த ஈயத் தட்டுகளையெல்லாம் மாற்றிவிட்டு எவர்சில்வர் தட்டுகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலையைப் பொறுத்து அவைகளெல்லாம் உரிய காலத்திலே பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, முதல்வர் அவர்களுடைய கையெழுத்தைப் பெற்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இந்த ஜெயில்களுக்கு வாங்கக்கூடிய சரக்குகளை எல்லாம் சிறப்பு அங்காடிகளிலே வாங்க வேண்டுமென்ற உத்தரவை இந்த மாமன்றத்திலே அறிவித்தார்கள். ஆனால், தனிப்பட்ட கான்ட்ராக்டர்களிடம் வாங்குகின்ற காரணத்தினாலே இந்த உணவுப் பொருட்களுக்கெல்லாம் சற்று கூடத்தான் கொடுக்க வேண்டி இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் அறிவித்தபடி கூட்டுறவு

சிறப்பு அங்காடிகளிலிருந்து ஜெயில்களுக்கு இந்தச் சரக்குகளை இந்த அரசு வாங்கத் துவங்கும் என்பதை அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகத்தான் இப்போது பர்சேஸ் செய்யப்படுகிறது. அப்படி ஏதாவது தகவல் இருந்தால் அரசிடத்திலே சொன்னால், அது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் வைக்கப்பட்ட விவாதத்தில் இருக்கின்ற துணை மானியக் கோரிக்கையில் சிறைச்சாலைகளை நவீனப் படுத்துவதற்காக ஒரு கோடிக்கு மேல் செலவு செய்யப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. எந்தவகையில் தமிழகத்தில் சிறைச்சாலைகள் நவீனப்படுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய முடியுமா?

முற்பகல் 9-55

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 65, திரு. எஸ். ஆர். ஜெயராமன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

65—

## பத்திரப்பதிவு அலுவலகத்தை மீண்டும் பழைய இடத்திற்கு மாற்றுதல்.

*9949—திரு. எஸ். ஆர். ஜெயராமன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அனைத்து வசதிகளும் கொண்ட தாதகாப்பட்டியில் இருந்த பத்திரப்பதிவு அலுவலகம் வசதிகள் இல்லாத இடத்திற்கு மாற்றப்பட்டு உள்ளதால் அதை மீண்டும் பழைய இடத்திற்கே மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,